**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING EVIRONMENTAL CLEARANCE FROM STATE ENVIRONMENT IMPACT ASSESSMENT AUTHORITY (SEIAA) – TAMIL NADU FOR THE PROPOSED ROUGH STONE & GRAVEL QUARRY OF M/s. SRI ELUMALAIYAN BLUE METALS, OVER AN EXTENT OF 4.82.50 HECTARE LOCATED IN S.F.NO. 137/1, 137/2A, 137/2B, 137/2C, 139/1(P), 139/2, 139/3, 139/4, 139/5, 139/6, 139/7, 139/8, 139/9, 139/10, 139/11, 139/12, 141/1, 141/2, 141/3, 141/4A, 141/4B, 141/4C, 141/5A, 141/5B, 141/6, 141/8, 141/9, 141/10, 143/6A2, 143/12, 143/13, 143/14 & 143/15 OF MENALLUR VILLAGE, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT, HELD ON 07.01.2025 AT 11.00 AM IN M/s. R.S.E MAHAL, MAMANDUR, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT.**

Present:

| | | |
|---|---|---|
| 1. | Thiru. Baskara Pandiyan, IAS., | District Collector,<br>Tiruvannamalai. |
| 2. | Tmt. T. Kalaiselvi | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 3. | Thiru. K. Prem Kumar | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 4. | Selvi. R. Vijayashree | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 5. | Thiru. K. Perumal | Tashildar (i/c),<br>Vembakkam Taluk,<br>Tiruvannamlai. |
| 6. | Thiru.M. Sathish | Revenue Inspector,<br>Dusi,<br>Vembakkam |
| 7. | Thiru.M. Gunasekarn | Village administrative officer,<br>Menallur Village,<br>Vembakkam |
| 8. | Tmt. A. Amutha | Assistant Manager,<br>Tamil Nadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 9. | Public and Environmentalists | 116 Persons (list enclosed). |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, on behalf of the Tamil Nadu Pollution Control Board has welcomed the District Collector, Tiruvannamalai who presided the public Hearing meeting, the Government officials, the public, the

environmentalists and explained the need of the public Hearing for obtaining Environmental Clearance for the proposed rough stone and gravel quarry as follows.

"As per the Environmental Impact Assessment Notification 2006 all the projects and activities listed in the schedule to the notification, require prior Environmental Clearance from the State Environment Impact Assessment Authority (SEIAA). The Environmental Clearance process involves public consultation, which is why the public hearing meeting is being conducted for the proposed Rough stone and Gravel Quarry project by M/s. Sri Elumalaiyan Blue Metals. This project aims to quarry rough stone and gravel over an extent of 4.82.50 hectares in Menallur Village, Vembakkam Taluk, Tiruvannamalai District.

As per EIA, 2006 the mining projects (Individual or Cluster extent) above 5 hect of that area requires prior Environmental Clearance from the State Environment Impact Assessment Authority. This public hearing meeting will be recorded and submitted in the form of audio and video to the State Environment Impact Assessment Authority. Accordingly, the public notice for this public hearing was published in dailies of "Times of India" (English) & "Daily Thanthi" (Tamil) on 28.11.2024 with the approval of the District Collector, Tiruvannamalai for the proposed rough stone & gravel quarry of M/s. Sri Elumalaiyan Blue Metals.

The District Environmental Engineer, further stated that the proposed quarry project and its Environmental Impact Assessment Study report details will be explained through a power point presentation by the project proponent's consultant. Following the presentation, the public can express their views, suggestions and comments one by one either in oral or in written format on the said project. The opinions & suggestions of the public & environmentalists will be recorded and submitted to the State Environment Impact Assessment Authority."

The District Collector, Tiruvannamalai requested the project proponent to explain about the proposed Rough stone & gravel quarry and

the Environmental Impact Assessment study conducted by them to the public in detail.

On behalf of the project proponent, Tmt. K. Abirami, Coordinator, M/s. Global Mining Solutions, Salem (Consultant for the proposed rough stone & gravel quarry of M/s. Sri Elumalaiyan Blue Metals) explained the details of the project and the Environmental Impact Assessment study conducted by them with help of power point presentation.

Then the District Collector, Tiruvannamalai informed the public to express their views/suggestions/comments in oral or written statement one by one and instructed the participants to provide their name and address before sharing their feedback, and to do so one by one, to ensure an orderly & transparent process.

The following are the views/suggestions/comments represented by the public.

**1. Thiru. Kuppan, Menallur Village**

He stated that he was the former panchayat president of Menallur village. He extended greetings to the District Collector, who presided over the public hearing meeting for the proposed Sri Ezhumalaiyan Blue Metals Quarry, the District Environmental Engineer, government officials, and the general public. He quoted Gandhiji's saying, "The development of the village is the development of the nation." During his ten-year tenure as village panchayat president, the funds provided by the central and state governments were insufficient for the overall development of their village.

Now, the project proponent has provided basic facilities to their village such as streetlights, amenities to school, conversion of mud roads into cement roads and drinking water facilities. Unlike other existing quarries, the transport lorries of M/s. Sri Ezhumalaiyan Blue Metals Quarry pass only through the bypass roads and not through the school in their village. And also, the proposed stone Quarry is located far away. The project proponent of the quarry has done a lot for the development of their village and has followed government rules. On behalf of the Village Panchayat

President, he welcomed the establishment of proposed M/s. Sri Ezhumalaiyan Blue Metals stone quarry and submitted an acceptance petition to the District Collector. Finally, he concluded his speech by **expressing his support** for the establishment of the proposed quarry.

**2. Thiru. S.Kumaraswamy, Girijapuram Village**

He extended greetings to the District Collector, District Environmental Engineer, and the public present at the public hearing meeting. The establishment of the quarry has brought several benefits to their village, including improved infrastructure such as roads, drinking water supply, and upgraded school facilities with smart class, steel desks, quality benches. Furthermore, the project proponent has provided financial assistance for school infrastructure and school children, as well as employment opportunities for the youth and elders of the village, thereby enhancing their livelihood. The quarry has also given priority to local lorry drivers in employment. He requested that the lorry drivers be mindful of children going to school by give them way to ensure they reach the schools on time. The project proponent has also helped provide lighting and camera facilities to their village, which had been in dark. He concluded his speech by **expressing support** for the establishment of the proposed quarry.

**3. Thiru. Venkatesan, Girijapuram Village**

He stated that the proposed quarry would bring numerous benefits to their village. The project proponent has installed surveillance cameras in schools and provided tar roads to the village. According to him, the establishment of the quarry has only advantages and no disadvantages for their village and he concluded his speech by **expressing support** for the establishment of the proposed quarry.

**4. Thiru. M. Venkatesan, Menallur Village**

He stated that the project proponent of M/s. Sri Elumalaiyan Blue Metals Quarry would bring numerous benefits to their village including

employment and he concluded his speech by **expressing support** for the establishment of the proposed quarry.

**5.Thiru. Kamalakannan, Girijapuram Village**

The project proponent has made significant contributions to the village's development, providing adequate funds for basic amenities. These funds have enabled the construction of essential infrastructure, including roads, drinking water facilities, and smart classes equipped with steel desks and tiled floors, ultimately enhancing the village schools' infrastructure. Furthermore, the project has generated employment opportunities for local villagers and lorry drivers, which will likely contribute to the village panchayat's development if the quarry is approved. The availability of M-Sand, P-Sand, and Jelly will also facilitate easy access to construction materials for house building. Thereby, he concluded his speech by **expressing support** for the establishment of the proposed quarry.

**6.Thiru. Jaishankar, Menallur Village**

He stated that some individuals claim the school's improvement is due to the quarry's establishment. However, the actual purpose of the meeting is to gather views on whether the environment is being polluted by the quarry. While people claim there is no air pollution, no surveys have been conducted to measure $SO_2$ and $NO_2$ levels in the village. In fact, the report itself indicates wrong values of $SO_2$ and $NO_2$.

He added that villagers stop lorries in Menallur, alleging dust pollution, but no one mentioned this issue during the meeting. He also pointed out that his house and nearby shops are severely affected by dust from lorry movements. Air pollution caused due to the operation of the quarry and vehicle movements can cause cold, respiratory and heart diseases. Furthermore, there is a primary health centre on the Menallur-Chinna Ezhacherry road, where pregnant women, the elderly, and diabetic patients receive treatment, and they are greatly affected by the quarry trucks movement.

At this juncture, the speech was stopped due to interruptions and the District Collector advised others not to interfere while someone is expressing their views.

Thiru. Jaishankar resumed his speech, stating that the quarry's operation poses a significant risk to the public. He questioned why the public hearing was not held at the quarry site, which is located four kilometers away from Menallur village, where the meeting was being held. He also pointed out that there are 5,000 people in the village and surrounding areas, asking why the meeting was conducted on a working day instead of a holiday. Additionally, he raised concerns about the quarry's proximity to a pond and another quarry, asking how permission could be granted despite these environmental concerns. He emphasized that no quarries, including the proposed one, should be allowed to operate in Menallur village. He concluded his speech by **opposing the quarry's establishment** with a proclamation that a major protest would be organized if the proposed quarry is approved.

**7.Thiru. Duraimrugan, Menallur Village**

He stated that strict rules are being followed, and four to five departments' NOCs are required for the establishment of the quarry. All government authorities adhere to these rules to provide permission. For the last two years, the quarry proponent has maintained the stone quarry by planting saplings around it and sprinkling water through tanker lorries. The quarry owner has granted Rs. 6,00,000/- to the Kanyamman temple and donated Rs. 4,00,000/- to the Perumal temple located in their village.

Furthermore, he mentioned that job priority has been given to local people, and 20 to 30 local lorry drivers have been employed in their quarry. The proponent has developed green belt by planting tree saplings around the proposed quarry site and water sprinkling through tanker lorries is being done to suppress the dust emission. He also provided steel benches, electric bells, and infrastructure facilities to the schools located in their village. The project proponent has also appointed teachers for English medium education in the primary school of their village and pays them monthly

salaries. He concluded his speech by **expressing his support** for the establishment of the proposed quarry.

**8. Thiru. Subramani, Menallur Village**

He stated that their village people have not been affected by the proposed Sri Ezhumalaiyan Blue Metals quarry and that the project proponent has done many good deeds for them. He concluded his speech by **expressing his support** for the establishment of the proposed quarry.

**9. Thiru. Annadurai, Menallur Village**

He stated that he welcomed the proposed Sri Ezhumalaiyan Blue Metals quarry project. He mentioned that trucks mostly did not enter the village boundaries, but some trucks came without the quarry owners' knowledge. It was suggested by him that this should be monitored by the quarry owners, and he concluded his speech by **expressing his support** for the establishment of the proposed quarry.

**10. Thiru. Sadasivam, Menallur Village,**

He stated that he welcomes the establishment of the Sri Ezhumalaiyan Blue Metals Quarry, expressing no objections whatsoever. He noted that the quarry has brought numerous benefits to their village, particularly to the local primary and higher secondary schools, as well as the Anganwadi. However, he mentioned that the higher secondary school has been unable to utilize the funds provided by the quarry management, and requested the District Collector's intervention to resolve this issue. He concluded his speech by extending his support to the quarry project.

**11. Thiru. M.C. Ravi, Menallur Village,**

He stated that the quarry has enabled 300 families to live without hunger or poverty, improving their livelihoods. They now have access to necessities like food, water, and other essential facilities. Additionally, trees have been planted around the quarry. The quarry management has also provided financial support for the development of temples in our village.

Therefore, we have no objections to the establishment of this quarry. He **expressed his support** for the quarry project and concluded his speech.

**12. Thiru. Ramachandran, (NGO) Andhra Pradesh,**

He stated that the quarry has brought numerous benefits to the people, including provision of drinking water facilities and renovation of roads. The presence of quarry has improved the lives of the village people. Therefore, he **expressed his support** for the quarry, stating that permission should be granted for its operation, and concluded his speech.

**13. Thiru. Krishnaswami, Nedunthurai Village,**

He expressed wholehearted support for the establishment of the quarry, acknowledging its numerous benefits to the local community. He highlighted that the quarry has not caused any health issues, such as colds or fevers, among the villagers. Instead, the quarry management has provided various amenities, including support for local festivals, which has improved the quality of life in the village. The speaker also emphasized the importance of gratitude, citing the Thirukural,

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**

**செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**

He concluded his speech by **expressing his support** for the establishment of the proposed quarry.

**14. Thiru. Das, Menallur Village,**

He stated that he **extends his full support** for the establishment of this quarry and concluded his speech.

**15.Thiru. E. Narayanasamy, Menallur Village,**

He stated that this quarry has brought numerous benefits to our village and **expressed his support** for its establishment, concluding his speech.

**16. Thiru. Sivakumar, Menallur Village,**

He stated that the proposed Sri Ezhumalaiyan Blue Metals Quarry does not pose any problems for them. Additionally, he requested that the quarry management widen the surrounding transportation road and ensure that lorries allow oncoming vehicles to pass, thereby minimizing disruptions. He expressed his support for the quarry's establishment and concluded his speech.

**The following 24 members of the public have expressed their opinion in writing on the proposal of this Rough stone and Gravel quarry. Among the 24 members, 24 members have expressed their support and no members have expressed their objection to the operation of this quarry.**

| S.No | Name& Place | Comment |
|---|---|---|
| 1 | Thiru. P. Suresh,<br>Menallur Village,<br>Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 2 | Thiru. A. Kuppan, Ex.President,<br>Menallur Village,<br>Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 3 | Thiru. S. Kumaraswamy,<br>Menallur Village,<br>Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 4 | Thiru. A. Venkatesan,<br>Menallur Village,<br>Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 5 | Thiru. S. Duraimurugan,<br>Menallur Village,<br>Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 6 | Mrs. S. Fathima,<br>Ananthapur District,<br>Andhara Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 7 | Thiru. Muni Krishnan,<br>Tirupathi District,<br>Andhra Pradesh | Expressed support in favour of the proposed quarry |
| 8 | Thiru.T. Anil Reddy,<br>Karimnagar,<br>Telegana | Expressed support in favour of the proposed quarry |
| 9 | Thiru. M. Muthu Raja,<br>Ramanathapuram district. | Expressed support in favour of the proposed quarry |
| 10 | Thiru. S.K. Rahiman,<br>Padamata,<br>Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |

| | | |
|---|---|---|
| 11 | Thiru. Krishnaswamy,<br>Menallur Village,<br>Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 12 | Thiru. S. Kanchana Chary,<br>Rangareddy District,<br>Telegana | Expressed support in favour of the proposed quarry |
| 13 | Tmt.K.Revathi,<br>Menallur Village,<br>Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 14 | Thiru.T.Rathinam,<br>Menallur Village,<br>Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 15 | Thiru.D.Sampath,<br>Menallur Village,<br>Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 16 | Thiru. S. Venkata Subbaiah,<br>Kadapa District,<br>Andhra Pradesh. | Expressed support in favour of the proposed quarry |
| 17 | Thiru.Soundarajan,<br>Menallur Village,<br>Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 18 | Thiru.K. Kailasam,<br>Menallur Village,<br>Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 19 | Thiru.P.Dhanasekar,<br>Menallur Village,<br>Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 20 | Thiru. T.Thiruvenkatam,<br>Menallur Village,<br>Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 21 | Thiru. Ramalingam,<br>Menallur Village,<br>Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 22 | Thiru. P. Das,<br>Menallur Village,<br>Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 23 | Thiru. A. Poongavanam,<br>Menallur Village,<br>Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |
| 24 | Thiru. Ellapan,<br>Menallur Village,<br>Tiruvannamalai District. | Expressed support in favour of the proposed quarry |

As there were no views/comments raised further, District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai, with the District Collector's approval, has announced that the meeting came to an end with the vote of thanks.

**Enclosures:**

1. Copy of press release (Public Notice published in the daily Newspaper Tamil & English dated 28.11.2024 for notifying the public hearing meeting).
2. The certificate issued by the Village Administrative Office for the Audio announcement and issue of notices.
3. Attendance sheet at the public hearing (Total pages 11 & 116 persons).
4. Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.
5. Photographs of the public hearing/summary in English & Tamil, submitted by the Project Proponent.
6. EIA Report & Executive summary (Tamil & English).
7. Petitions received through Public Hearing Meeting - 24 numbers.

13/1/2025

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Tiruvannamalai.**

1/20/2025

**District Collector,**
**Tiruvannamalai.**

(5/6)

**திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், மேனல்லூர் கிராமத்தில் புல எண்கள். 137/1, 137/2A, 137/2B, 137/2C, 139/1(P), 139/2, 139/3, 139/4, 139/5, 139/6, 139/7, 139/8, 139/9, 139/10, 139/11, 139/12, 141/1, 141/2, 141/3, 141/4A, 141/4B, 141/4C, 141/5A, 141/5B, 141/6, 141/8, 141/9, 141/10, 143/6A2, 143/12, 143/13, 143/14 மற்றும் 143/15, 4.82.50 ஹெக்டேர் பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள திி/ள். ஸ்ரீ ஏழுமலையான் புளூ மெட்டல்ஸ் சாதாரண கல் மற்றும் கிராவல் சுரங்கத்திற்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 07.01.2025 அன்று திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், மாமண்டூரில் அமைந்துள்ள தி/ள். R.S.E மஹாலில் காலை 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்ட அறிக்கை விபரங்கள்.**

**பங்கேற்றோர்:**

**திருவாளர்கள்**

| | | |
|---|---|---|
| 1. | திரு.தெ. பாஸ்கர பாண்டியன், இ.ஆ.ப., | மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை. |
| 2. | திருமதி. தி. கலைச்செல்வி | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை. |
| 3. | திரு. க. பிரேம் குமார் | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை. |
| 4. | செல்வி. இரா. விஜயஸ்ரீ | உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை. |
| 5. | திரு.க. பெருமாள் | வட்டாட்சியர் (i/c), வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை. |
| 6. | திரு.M.சதீஷ் | வருவாய் ஆய்வாளர், தூசி உள்வட்டம், வெம்பாக்கம் வட்டம். |
| 7. | திரு.மு.குணசேகரன் | கிராம நிர்வாக அலுவலர், மேனல்லூர் கிராமம், வெம்பாக்கம் வட்டம். |
| 5. | திருமதி. அ. அமுதா | உதவி மேலாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை. |
| 6. | பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | (116 நபர்களின் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமை வகித்த மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்களையும், கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்த அரசு அதிகாரிகளையும், பங்கேற்ற பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் அனைவரையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வரவேற்று உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கு சுற்றுச்சசூழல் அனுமதி பெறும் பொருட்டு நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்தின் அவசியத்தை பின்வருமாறு எடுத்துரைத்தார்.

"திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், மேனல்லூர் கிராமத்தில், தி/ள். ஸ்ரீ ஏழுமலையான் புளூ மெட்டல்ஸ் நிறுவனமானது 4.82.50 ஹெக்டேர் பரப்பளவில் சாதாரண கல் மற்றும் கிராவல் திட்டத்திற்கு R.S.E மஹாலில் காலை 11.00 மணியளவில் நடைபெறுமென 28.11.2024 அன்று தினத்தந்தி மற்றும் டைம்ஸ் ஆப் இந்தியா ஆகிய தினசரி செய்தி தாள்களில் பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை 2006-ன்படி தனியாகவோ அல்லது கூட்டாகவோ 5.00 ஹெக்டர் பரப்பளவிற்கு மேல் பாறையிலிருந்து கற்களை வெட்டி எடுப்பதற்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமூக நல ஆர்வலர்களிடம் கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ பெற்று அதனை ஒலி மற்றும் ஒளி பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின் படி தி/ள். ஸ்ரீ ஏழுமலையான் புளூ மெட்டல்ஸ் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரிக்கு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் தி/ள். R.S.E மஹாலில் 07.01.2025 அன்று காலை 11.00 மணியளவில் நடைபெறுமென தினதந்தி மற்றும் டைம்ஸ்

ஆப் இந்தியா செய்தி தாள்களில் 28.11.2024 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தங்களது கருத்துகளை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவிக்கும் போது பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்களை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அதன் பின்னர் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தினர் இத்திட்டத்திற்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவது குறித்து பரிசீலனை செய்வார்கள். தற்போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை தொடங்கி வைப்பார்கள். அதன் பின்னர் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் தங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள்".

மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்கள் சுரங்க நிர்வாகத்தினரை உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் குறித்தும் நிர்வாகத்தினரால் தயாரிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை குறித்தும் பொதுமக்களுக்கு விளக்கும் படி கேட்டுக்கொண்டார். மேலும் பொது மக்கள் கருத்து தெரிவிக்கும் போது தங்கள் பெயரை குறிப்பிட்டு கருத்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து திருமதி. கே. அபிநயா, ஒருங்கிணைப்பாளர், தி/ள். குளோபல் மைனிங் சொல்யுசன்ஸ், சேலம் (தி/ள். ஸ்ரீ ஏழுமலையான் புளூ மெட்டல்ஸ் சாதாரண கல் மற்றும் கிராவல் குவாரியின் ஆலோசகர்) அவர்கள் நிழற்பட விளக்கக் காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கை பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர், திருவண்ணாமலை அவர்கள், பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார். அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

1. **<u>திரு. குப்பன், மேனல்லூர் கிராமம்</u>**

இவர், நான் மேனல்லூர் கிராமத்தின் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர். எங்கள் கிராமத்தில் அமைய உள்ள ஸ்ரீ ஏழுமலையான் ப்ளூ மெட்டல்ஸ் குவாரியின் பொதுமக்கள் கருத்து கேட்டு கூட்டத்தை தலைமை ஏற்று நடத்திக் கொண்டிருக்கும் மரியாதைக்குறிய மாவட்ட ஆட்சியர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்களுக்கு என் வணக்கத்தினை தெரிவித்துக்கொள்கிறேன். நமது காந்தியவர்கள் "கிராம வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி" எனக் கூறியுள்ளார். ஊராட்சி மன்ற தலைவராக நான் பத்து ஆண்டு காலம் இருந்தபோது மத்திய மற்றும் மாநில அரசுகள் வழங்கும் நிதி ஊராட்சியின் முழுமையான வளர்ச்சிக்கு போதவில்லை. தற்போது அமையவிருக்கும் மேற்படி குவாரி நிர்வாகத்தினர் எங்கள் கிராமத்திற்கு உயர் மின் விளக்குகள், பள்ளிக்கூட மேம்பாடு, மண் சாலைகளை சிமெண்டு சாலைகளாக அமைத்தல், குடிநீர் வசதி போன்ற வசதிகளை செய்து கொடுத்துள்ளனர். ஸ்ரீ ஏழுமலையான் ப்ளூ மெட்டல்ஸ் குவாரியின் லாரிகள், மற்ற குவாரிகளின் லாரிகளைப் போல் அல்லாமல் எங்கள் கிராமத்திலுள்ள பள்ளிக்கூடம் வழியாக செல்லாமல் புறவழிச்சாலை வழியாக செல்வதால் எங்களுக்கு எந்த இடையூறும் இல்லை. கல் குவாரியானது தனியாக வெகு தொலைவில் உள்ளது. மேலும் குவாரி உரிமையாளர் எங்கள் கிராம வளர்ச்சிக்கு போதுமான உதவிகள் அளித்துள்ளார். மற்றும் அரசு விதிகளை சரிவர பின்பற்றி வருகிறார். எனவே ஸ்ரீ ஏழுமலையான் ப்ளூ மெட்டல்ஸ் கல் குவாரி எங்கள் ஊரில் அமைப்பதற்கு ஊராட்சி மன்ற தலைவர் சார்பாக நான் முழு மனதோடு வரவேற்கிறேன், அதற்கான மனுவை மாவட்ட ஆட்சித்தலைவரிடம் ஒப்படைக்கிறேன் எனக் கூறி குவாரி அமைவதற்கு **ஆதரவு தெரிவித்து** தனது உரையை முடித்துக் கொண்டார்.

2. **<u>திரு. எஸ் குமாரசாமி, கிரிஜாபுரம் கிராமம்</u>**

இவர், பொதுமக்கள் கருத்து கேட்புக் கூட்டத்திற்கு வருகை தந்திருக்கும் மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சியர், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் மற்றும் எங்கள் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்களுக்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த குவாரி அமைவதால் எங்கள் கிராமத்தில் ஒரு சில நன்மைகள் ஏற்பட்டுள்ளது. அதாவது சாலை வசதி, குடிநீர் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. நமது கிராம பள்ளிகளில் ஸ்மார்ட் கிளாஸ் ஸ்டீல் டெஸ்க் , தரமான பெஞ்கள் மற்றும் வகுப்பறைக்கு தரைத்தளம் அமைத்துக் பள்ளிகளுக்கு தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகளையும் எங்கள் கோரிக்கையின் பேரில் நிவர்த்தி செய்துள்ளார்கள். மேலும் பள்ளிகளுக்கும் மற்றும் பள்ளி குழந்தைகளுக்கும் தேவையான நிதி உதவியும் வழங்கியுள்ளார்கள். அதுமட்டுமல்லாமல் கிராம இளைஞர்கள் மற்றும் பெரியோர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாமல் உள்ளூர் லாரி ஓட்டுனர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலைவாய்ப்பு கொடுத்துள்ளனர். குழந்தைகள் பள்ளிக்கு செல்லும் போது லாரி ஓட்டுநர்கள் சற்று கவனித்து அவர்கள் முன்னே செல்ல வழிவிட்டால் குழந்தைகள் உரிய நேரத்தில் பள்ளிக்கு செல்வார்கள். மேலும், எங்கள் கிராமம் முன்பு இருள் சூழ்ந்த கிராமமாக இருந்தது. தற்போது மின்விளக்கு வசதிகள் மற்றும் கேமரா வசதிகள் ஏற்படுத்தியுள்ளனர் என கூறி குவாரி அமைவதற்கு **ஆதரவு தெரிவித்து** தனது உரையை முடித்துக் கொண்டார்.

3. **<u>திரு. A. வெங்கடேசன், கிரிஜாபுரம் கிராமம்</u>**

இவர், "உத்தேசிக்கப்பட்ட கல்குவாரியால் எங்கள் ஊரில் பல நன்மைகள் ஏற்பட்டுள்ளன. பள்ளிகளுக்கு கண்காணிப்பு கேமரா வசதி மற்றும் எங்கள் கிராமத்திற்கு தார் சாலை அமைத்து கொடுத்துள்ளனர். இந்த கல்குவாரி அமைவதால் எங்கள் கிராமத்திற்கு நன்மைகள் மட்டுமே தீமைகள் எதுவும் இல்லை" எனக்கூறி குவாரி அமைவதற்கு **ஆதரவு தெரிவித்து** தனது உரையை முடித்துக் கொண்டார்.

4. **<u>திரு. எம். வெங்கடேசன், மேனல்லூர் கிராமம்</u>**

இவர் கூறுகையில், உத்தேசிக்கப்பட்டுள்ள ஸ்ரீ ஏழுமலையான் ப்ளூ மெட்டல்ஸ் கல்குவாரி நிர்வாகத்தினர் கிராம பொதுமக்களுக்கு பல நன்மைகளை செய்துள்ளனர் மற்றும் பொதுமக்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தித் தந்துள்ளனர். எனவே மேற்படி குவாரி அமைவதற்கு **ஆதரவு தெரிவித்து** தனது உரையை முடித்துக் கொண்டார்.

5. **<u>திரு. கமலக்கண்ணன், கிரிஜாபுரம் கிராமம்</u>**

இவர் கூறுகையில், "உத்தேசிக்கப்பட்ட கல்குவாரி நிர்வாகத்தினர் நமது கிராமத்திற்கு அடிப்படை வசதிகளுக்காக போதிய நிதி கொடுத்துள்ளனர். அந்த நிதியில் கிராமத்திற்கு சாலை வசதி, குடிநீர் வசதி, கிராம பள்ளிகளில் ஸ்மார்ட் கிளாஸ், ஸ்டீல் டெஸ்க் மற்றும் வகுப்பறைக்கு தரைத்தளம் அமைத்து பள்ளிகளுக்கு தேவையான அனைத்து கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதனால் எங்கள் கிராமப் பள்ளியின் தரம் மேம்படுத்தப்பட்டுள்ளது. சுற்று வட்டார மக்கள் மற்றும் லாரி ஓட்டுநர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்துள்ளனர். இந்த குவாரிக்கு அனுமதி கொடுப்பதால் எங்கள் பஞ்சாயத்து மேம்படுத்தப்படும். மேலும் எங்களுக்கு எம்–சாண்ட், பி–சாண்ட் மற்றும் ஜல்லிகள் வீடு கட்டுவதற்கு எளிதில் கிடைக்கிறது" எனக்கூறி குவாரி அமைவதற்கு **ஆதரவு தெரிவித்து** தனது உரையை முடித்துக் கொண்டார்.

6. **<u>திரு. ஜெய்சங்கர், மேனல்லூர் கிராமம்</u>**

இவர் கூறுகையில், குவாரி அமைவதால் பள்ளி மேம்படுகிறது என்று கூறுகிறார்கள் ஆனால் சுற்றுச்சூழல் மாசுபடுகிறதா இல்லையா என்பதைப் கேட்கத்தான் வந்துள்ளனர். காற்று மாசுபடவில்லை என்று சொல்கிறார்கள் ஆனால் காற்றில் $SO_2$ மற்றும் $NO_2$ அளவுகள் நம் ஊரில் ஆய்வு செய்யாமல் அளவீடுகளை அவர்களாகவே அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர். காற்று மாசுபடுவதால் பொதுமக்களுக்கு சளி, தும்மல் மற்றும் இருதய நோய்கள் ஏற்படுகின்றன. மேனல்லூரில் செல்லும் லாரிகளை தூசி வருவதாக கூறி

நிறுத்திவிடுகிறீர்கள். ஆனால் இக்கூட்டத்தில் யாரும் இதுகுறித்து பேசவில்லை. என்னுடைய வீடு மற்றும் கடைகளில் லாரிகள் செல்வதினால் தூசு அதிக அளவில் படிந்துள்ளது. குவாரி அமையவுள்ள மேனல்லூர் – சின்னஎழாச்சேரி சாலையில் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. மேற்படி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சிகிச்சை பெற வரும் கர்ப்பிணி பெண்கள், முதியவர்கள் மற்றும் நோயாளிகள் உபயோகிக்கும் இச்சாலையில் குவாரியின் லாரிகளின் இயக்கத்தால் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகின்றனர்". அப்போது பொதுமக்கள் இடையில் சலசலப்பு ஏற்பட்டது. எனவே மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஒருவர் கருத்து தெரிவிக்கும் போது யாரும் இடையூறு செய்ய வேண்டாம் என்று அறிவுறுத்தினார். மீண்டும் திரு. ஜெய்சங்கர் "இக்குவாரி இயக்கத்தினால் பொதுமக்களுக்கு மிகப்பெரிய ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளது. மேலும் நான்கு கிலோமீட்டர் தொலைவில் உள்ள இந்த இடத்தில் ஏன் பொது கருத்து கேட்பு கூட்டம் நடத்துகிறீர்கள் குவாரி அமைய இருக்கும் மேனல்லூர் கிராமத்தில் ஏன் நடத்தவில்லை. எங்கள் கிராமம் மற்றும் சுற்றிவட்டார பகுதியிலிருந்து 5000 மக்கள் உள்ளனர். விடுமுறை நாட்களில் இக்கூட்டத்தை நடத்தாமல் வேலை நாட்களில் ஏன் நடத்துகிறீர்கள். இந்த குவாரி அமைய உள்ள இடத்தின் அருகில் குளம் மற்றும் மற்றுமொரு குவாரி இருக்கும் பட்சத்தில் எவ்வாறு அனுமதி வழங்குகிறீர்கள். எனவே, மேனல்லூரில் இந்த குவாரி மட்டுமல்லாமல் வேறு எந்த குவாரியும் இயக்க அனுமதி வழங்க கூடாது. அவ்வாறு வழங்கும் பட்சத்தில் சாலையில் இறங்கி சம்பந்தபட்ட ஆட்களை திரட்டி மிகப்பெரிய போராட்டம் நடத்துவேன்" என குவாரி அமைவதற்கு **எதிர்ப்பு தெரிவித்து** தனது உரையை முடித்துக் கொண்டார்.

**7. திரு.S. துரைமுருகன், மேனல்லூர் கிராமம்**

இவர் கூறுகையில், கல்குவாரி அமைவதற்கு கடுமையான விதிமுறைகள் பின்பற்றப்படுகிறது. நான்கு முதல் ஐந்து துறைகளின் தடையில்லா சான்று பெற வேண்டும். அனைத்து அதிகாரிகளும் விதிமுறைகளை பின்பற்றியே அனுமதி வழங்குகிறார்கள். இக்கல்குவாரி நிர்வாகத்தினர் கடந்த இரண்டு வருடங்களாக கல் குவாரியைச் சுற்றி மரக்கன்றுகள் வைத்து டேங்கர் லாரிகள் மூலம் தண்ணீர்

தெளித்து முறையாக பராமரித்து வருகிறார்கள். எங்கள் ஊரில் அமைந்துள்ள கன்னியம்மன் கோயிலுக்கு குவாரி உரிமையாளர் ஆறு லட்சம் வழங்கியுள்ளார்கள். அதேபோல் பெருமாள் கோயிலுக்கு நான்கு லட்சம் நிதி உதவி செய்துள்ளார்கள். உள்ளூர் மக்களுக்கு முன்னுரிமை வழங்கி 20 முதல் 30 லாரி ஓட்டுநர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்துள்ளனர் மேலும் உத்தேசிக்கப்பட்ட ஸ்ரீ ஏழுமலையான் ப்ளூ மெட்டல் கல்குவாரியை சுற்றிலும் மரங்கள் நடப்பட்டுள்ளன. மேலும் டேங்கர் லாரிகள் கொண்டு ஆங்காங்கே தூசுகளை கட்டுப்படுத்த நீர்தெளிக்கப்படுகின்றன. எங்கள் ஊரில் அமைந்துள்ள பள்ளிகளில் ஸ்டீல் பென்ஞ், மின்சார ஒலி எழுப்பான் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக்கொடுத்துள்ளனர். எங்கள் ஊரில் உள்ள ஆரம்பப் பள்ளியில் ஆங்கில வழி கல்வியை நடத்துவதற்கு உரிய ஆசிரியர்கள் அமைத்து அவர்களுக்கு மாத ஊதியம் வழங்கி வருகிறார்கள்" எனக் கூறி குவாரி அமைவதற்கு **ஆதரவு தெரிவித்து** தனது உரையை முடித்துக் கொண்டார்.

8. **<u>திரு. சுப்பிரமணி, மேனல்லூர் கிராமம்</u>**

இவர் கூறுகையில், உத்தேசிக்கப்பட்டுள்ள ஸ்ரீ ஏழுமலையான் ப்ளூ மெட்டல்ஸ் கல்குவாரியால் எங்களுக்கு எந்த பாதிப்பும் கிடையாது அவர்கள் எங்களுக்கு பல்வேறு நன்மைகளை செய்து வருகின்றனர் எனவே மேற்படி குவாரி அமைவதற்கு **ஆதரவை தெரிவித்து** தனது உரையை முடித்துக் கொண்டார்.

9. **<u>திரு. அண்ணாதுரை, மேனல்லூர் கிராமம்</u>**

இவர் கூறுகையில், உத்தேசிக்கப்பட்டுள்ள ஸ்ரீ ஏழுமலையான் ப்ளூ மெட்டல்ஸ் கல்குவாரி திட்டத்தை நான் வரவேற்கிறேன். மேலும் லாரிகள் பெரும்பாலும் ஊர் எல்லைக்குள் வருவதில்லை இருந்தபோதிலும் சில லாரிகள், உரிமையாளர்களுக்கு தெரியாமல் ஊருக்குள் வருகின்றன. இதை உரிமையாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கூறி குவாரி அமைவதற்கு **ஆதரவை தெரிவித்து** தனது உரையை முடித்துக் கொண்டார்.

10. **<u>திரு. சதாசிவம், மேனல்லூர் கிராமம்</u>**

இவர் கூறுகையில், ஸ்ரீ ஏழுமலையான் ப்ளூ மெட்டல்ஸ் கல்குவாரி அமைவதில் எனக்கு எந்தவித ஆட்சபனையும் இல்லை, நான் வரவேற்கிறேன். இந்த குவாரியால் எங்கள் ஊர் ஆரம்ப பள்ளி, அங்கன்வாடி, உயர்நிலைப் பள்ளியும் பல்வேறு நன்மைகளை அடைந்துள்ளன. உயர்நிலைப் பள்ளிக்கு கல்குவாரி நிர்வாகத்தினரால் வழங்கப்பட்ட நிதியை உபயோகிக்க முடியாத சூழல் உள்ளதால் மாவட்ட ஆட்சியர் தலையிட்டு இதனை நிவர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொண்டு இந்த கல்குவாரி திட்டத்திற்கு **ஆதரவு தெரிவித்து** தனது உரையை முடித்துக் கொண்டார்.

11. **<u>திரு. எம். சி. ரவி மேனல்லூர் கிராமம்</u>**

இவர் கூறுகையில், இந்த குவாரியால் 300 குடும்பங்கள் பசி, பட்டினி இன்றி அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட்டுள்ளது. அவர்களுக்கு அன்றாட உணவு, குடிநீர் போன்ற அனைத்து வசதிகளும் கிடைக்கின்றன. அதேபோன்று, இந்த குவாரியை சுற்றி மரங்கள் நடப்பட்டுள்ளன. எங்கள் கிராமத்தில் அமைந்துள்ள கோவில்களின் மேம்பாட்டிற்கு நிதி வழங்கியுள்ளனர். எனவே இந்த குவாரி அமைவதில் எங்களுக்கு எந்தவித ஆட்சபனையும் இல்லை எனக்கூறி குவாரி அமைவதற்கு **ஆதரவை தெரிவித்து** தனது உரையை முடித்துக் கொண்டார்.

12. **<u>திரு. ராமச்சந்திரா (என். ஜி. ஓ), ஆந்திரா</u>**

இவர் கூறுகையில், இந்த குவாரியால் மக்களுக்கு பல்வேறு நன்மைகள் ஏற்பட்டுள்ளன குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளன. இந்த குவாரியால் கிராம மக்களின் வாழ்க்கை மேம்பட்டுள்ளது. எனவே இந்த குவாரிக்கு அனுமதி வழங்க வேண்டும் என்று குவாரிக்கு **ஆதரவை தெரிவித்து** தனது உரையை முடித்துக் கொண்டார்.

1**<u>3. திரு. கிருஷ்ணசுவாமி, நெடுந்துறை கிராமம்</u>**

இவர் கூறுகையில், முதலில் இந்த கல்குவாரி அமைவதற்கு என்னுடைய முழு ஆதரவை தெரிவிக்கிறேன். இதற்கு முன்பாக பேசியவர் கூறியது போல

இந்த கல்குவாரியால் ஊர் மக்களுக்கு சளி, காய்ச்சல் போன்ற எந்தவிதமான உடல் உபாதையும் ஏற்படவில்லை. கல்குவாரி நிர்வாகத்தினர் எங்கள் கிராமத்திற்கு பல்வேறு நன்மைகளை செய்து வருகின்றனர். மேலும்

**"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு"**

என்ற திருக்குறளை மேற்கோள் காட்டி உதவி செய்தவர்களை மறக்கக்கூடாது என்று கூறினார். இந்த குவாரியால் நமது ஊர் மக்களுக்கு பல்வேறு உதவிகள் கிடைத்துள்ளன என்பதை தெரிவித்தார். இன்று நமது ஊரில் திருவிழாக்கள் நடக்கிறது என்றால் அதற்கு காரணம் இந்த கல்குவாரி நிர்வாகத்தினர் என்று கூறி குவாரி அமைவதற்கு **ஆதரவை தெரிவித்து** தனது உரையை முடித்துக் கொண்டார்.

14. **திரு. தாஸ், மேனல்லூர் கிராமம்,**

இவர் கூறுகையில், இந்த கல்குவாரி அமைவதற்கு முழு ஆதரவை தெரிவிக்கிறோம் என்று கூறி தனது உரை முடித்துக் கொண்டார்.

15. **திரு. E. நாராயணசாமி, மேனல்லூர் கிராமம்**

இவர் கூறுகையில், இந்த குவாரியால் எங்கள் கிராமத்திற்கு பல நன்மைகள் ஏற்படுகின்றன என்று கூறி குவாரி அமைவதற்கு தனது ஆதரவை தெரிவித்து தனது உரை முடித்துக் கொண்டார்.

16. **திரு. சிவகுமார், மேனல்லூர் கிராமம்**

இவர், உத்தேசிக்கப்பட்டுள்ள ஸ்ரீ ஏழுமலையான் ப்ளூ மெட்டல்ஸ் கல்குவாரி அமைவதால் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை. மேலும் குவாரியை சுற்றி உள்ள போக்குவரத்து சாலையை அகலப்படுத்தி கொடுக்க வேண்டும் மற்றும் லாரி ஓட்டுநர்கள் எதிரில் வரும் வாகனங்களுக்கு வழி விட்டு நின்று செல்லும் பட்சத்தில் எந்த பாதிப்பும் இருக்காது என்று கூறி குவாரி அமைவதற்கு **ஆதரவை தெரிவித்து** தனது உரையை முடித்துக் கொண்டார்.

**கீழ்கண்ட 24 நபர்கள் எழுத்துமூலமாக இக்குவாரி அமைவதில் ஆட்சேபனை இல்லை என கருத்து தெரிவித்துள்ளனர்.**

| வ.எண் | பெயர் மற்றும் ஊர் | கருத்து |
|---|---|---|
| 1 | திரு. ஏ. குப்பன்,<br>முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்,<br>மேனல்லூர் கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 2 | திரு. பி. சுரேஷ்,<br>மேனல்லூர் கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 3 | திரு. எஸ். குமாரசாமி,<br>மேனல்லூர் கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 4 | திரு. ஏ. வெங்கடேசன்,<br>மேனல்லூர் கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 5 | திரு. எஸ். துரைமுருகன்,<br>மேனல்லூர் கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 6 | திருமதி எஸ். பாத்திமா,<br>அனந்தபூர் மாவட்டம்,<br>ஆந்திரப் பிரதேசம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 7 | திரு. முனி கிருஷ்ணன்,<br>திருப்பதி மாவட்டம்,<br>ஆந்திரப் பிரதேசம் | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 8 | திரு. டி. அனில் ரெட்டி,<br>கரீம்நகர்,<br>தெலங்கானா | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 9 | திரு எம். முத்து ராஜா,<br>இராமநாதபுரம் மாவட்டம் | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 10 | திரு. **S.K.** ரஹ்மான்,<br>பத்மா,<br>ஆந்திரப் பிரதேசம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 11 | திரு. கிருஷ்ணசாமி,<br>மேனல்லூர் கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |

| | | |
|---|---|---|
| 12 | திரு. எஸ். காஞ்சனா சாரி,<br>ரங்காரெட்டி மாவட்டம்,<br>தெலங்கானா | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 13 | திருமதி. கே. ரேவதி,<br>மேனல்லூர் கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 14 | திரு. டி. ரத்தினம்,<br>மேனல்லூர் கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 15 | திரு. டி. சம்பத்,<br>மேனல்லூர் கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 16 | திரு. எஸ். வெங்கட சுப்பையா,<br>கடப்பா மாவட்டம்,<br>ஆந்திரப் பிரதேசம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 17 | திரு. சவுந்தரராஜன்,<br>மேனல்லூர் கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 18 | திரு. K. கைலாசம்,<br>மேனல்லூர் கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 19 | திரு. பி. தனசேகர்,<br>மேனல்லூர் கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 20 | திரு. T.திருவேங்கடம்,<br>மேனல்லூர் கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 21 | திரு. ராமலிங்கம்,<br>மேனல்லூர் கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 22 | திரு. பி. தாஸ்,<br>மேனல்லூர் கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 23 | திரு. ஏ. பூங்காவனம்,<br>மேனல்லூர் கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |
| 24 | திரு. எல்லப்பன்,<br>மேனல்லூர் கிராமம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். | இத்திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார் |

பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படாததால், மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலுடன் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து கூட்டம் நிறைவு பெறுவதாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் அறிவித்தார்.

**இதுதவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

1. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள். 28.11.2024).
2. துண்டு பிரசுரம் மற்றும் தண்டோரா அறிவிப்பு – கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று.
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்து கொண்டர்களின் வருகை பதிவேடு (11 பக்கங்கள் 116 நபர்கள்)
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு (DVD).
5. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
6. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
7. பொதுமக்கள் கருத்துகேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 24 மனுக்கள்.

13/1/2025

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**திருவண்ணாமலை**

**மாவட்ட ஆட்சியர்,**
**திருவண்ணாமலை**

13/1/2025